ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 7.1 – கறவா மடநாகு

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 7.1 – கறவா மடநாகு

‡ கறவா மட நாகு ⋆
தன் கன்றுள்ளினாற் போல் ⋆
மறவாதடியேன் ⋆
உன்னையே அழைக்கின்றேன் ⋆
நறவார் பொழில் சூழ் ⋆
நறையூர் நின்ற நம்பி ⋆
பிறவாமை எனைப் பணி ⋆
எந்தை பிரானே ! ‖ **7.1.1** ‖

வற்றா முது நீரொடு ⋆
மால் வரை ஏழும் ⋆
துற்றாக முன் துற்றிய ⋆
தொல் புகழோனே ⋆
அற்றேன் அடியேன் ⋆
உன்னையே அழைக்கின்றேன் ⋆
பெற்றேன் அருள் தந்திடு ⋆
என் எந்தை பிரானே ! ‖ **7.1.2** ‖

தாரேன் பிறர்க்கு ⋆
உன் அருள் என்னிடை வைத்தாய் ⋆
ஆரேன் அதுவே ⋆
பருகிக் களிக்கின்றேன் ⋆
காரேய் கடலே மலையே ⋆

திருக்கோட்டி ஊரே ⋆
உகந்தாயை ⋆
உகந்தடியேனே ‖ **7.1.3** ‖

புள் வாய் பிளந்த ⋆
புனிதா ! என்றழைக்க ⋆
உள்ளே நின்று ⋆
என் உள்ளம் குளிரும் ஒருவா ! ⋆
கள்வா ! ⋆
கடல் மல்லைக் கிடந்த கரும்பே ⋆
வள்ளால் ! உன்னை ⋆
எங்ஙனம் நான் மறக்கேனே ‖ **7.1.4** ‖

வில் ஏர் நுதல் ⋆
வேல் நெடுங்கண்ணியும் நீயும் ⋆
கல்லார் கடுங்கானம் ⋆
திரிந்த களிறே ⋆
நல்லாய் ! நர நாரணனே ! ⋆
எங்கள் நம்பி ⋆
சொல்லாய் உன்னை ⋆
யான் வணங்கித் தொழும் ஆறே ‖ **7.1.5** ‖

பனி ஏய் பரங்குன்றின் ⋆
பவளத் திரளே ⋆
முனியே ⋆
திருமூழிக்களத்து விளக்கே ⋆
இனியாய் ! தொண்டரோம் ⋆
பருகின் அமுதாய கனியே ⋆

உன்னைக் கண்டு கொண்டு ⋆
உய்ந்தொழிந்தேனே ‖ **7.1.6** ‖

கதியேல் இல்லை ⋆
நின் அருள் அல்லதெனக்கு ⋆
நிதியே ! ⋆
திருநீர்மலை நித்திலத் தொத்தே ⋆
பதியே பரவித் தொழும் ⋆
தொண்டர் தமக்குக் கதியே ⋆
உன்னைக் கண்டு கொண்டு ⋆
உய்ந்தொழிந்தேனே ‖ **7.1.7** ‖

அத்தா ! அரியே ! என்று ⋆
உன்னை அழைக்க ⋆
பித்தா என்று பேசுகின்றார் ⋆
பிறர் என்னை ⋆
முத்தே ! மணி மாணிக்கமே ! ⋆
முளைக்கின்ற வித்தே ⋆
உன்னை எங்ஙனம் நான் ⋆
விடுகேனே ! ‖ **7.1.8** ‖

தூயாய் ! சுடர் மா மதி போல் ⋆
உயிர்க்கெல்லாம் ⋆
தாயாய் அளிக்கின்ற ⋆
தண் தாமரைக் கண்ணா ! ⋆
ஆயா ! அலை நீர் உலகேழும் ⋆
முன் உண்ட வாயா ⋆

உன்னை எங்ஙனம் ⋆
நான் மறக்கேனே ॥ **7.1.9** ॥

‡ வண்டார் பொழில் சூழ் ⋆
நறையூர் நம்பிக்கு ⋆
என்றும் தொண்டாய ⋆
கலியன் ஒலி செய் தமிழ் மாலை ⋆
தொண்டீர் ! இவை பாடுமின் ⋆
பாடி நின்றாட ⋆
உண்டே விசும்பு ⋆
உம் தமக்கில்லை துயரே ॥ **7.1.10** ॥

அடிவரவு — கறவா வற்றா தாரேன் புள் வில் பனி கதி அத்தா தூயாய் வண்டார் புள்ளாய்

கறவா மடநாகு முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்